**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

## மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி எம்எல்ஏ, அமைச்சர் பதவியை இழந்த பொன்முடி: ராஜகண்ணப்பன், காந்திக்கு கூடுதல் இலாகா

**சென்னை:** சொத்து குவிப்பு வழக்கின் தீர்ப்பை அடுத்து, எம்எல்ஏ, அமைச்சர் பதவிகளை பொன்முடி இழந்துள்ளார். அவர் வகித்து வந்த உயர்கல்வி துறை, அமைச்சர் ராஜகண்ணப்பனுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்புதலை ஆளுநர் ஆர்.என்.ரவி வழங்கியுள்ளார்.

சொத்து குவிப்பு வழக்கில், தமிழக உயர்கல்வி துறை அமைச்சர் பொன்முடி, அவரது மனைவி விசாலாட்சி ஆகியோருக்கு தலா 3 ஆண்டுகள் சிறை தண்டனையும், தலா ரூ.50 லட்சம் அபராதமும் விதித்து உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது. இதைத் தொடர்ந்து, மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி, சட்டப்பேரவை உறுப்பினர் தகுதியை பொன்முடி இழந்தார். இதையடுத்து, அவரது அமைச்சர் பதவியும் பறிபோனது.

தொடர்ந்து, பொன்முடி வகித்துவந்த உயர்கல்வி துறை அமைச்சர் பதவியை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறை அமைச்சர் ராஜகண்ணப்பனுக்கு ஒதுக்குமாறு ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு முதல்வர் ஸ்டாலின் பரிந்துரைத்தார். இதை ஏற்று, ஆளுநர் தனது ஒப்புதலை அளித்துள்ளார். இதுகுறித்து ஆளுநர் மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

முதல்வரின் பரிந்துரையை ஏற்று, பொன்முடி வசம் இருந்த உயர்கல்வி, தொழில்நுட்ப கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றை உள்ளடக்கிய உயர்கல்வி துறை தற்போது பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலத் துறை அமைச்சர் ராஜகண்ணப்பனிடம் கூடுதலாக வழங்கப்படுகிறது. ராஜகண்ணப்பன் கவனித்து வந்த காதி, கிராமத் தொழில்கள் வாரியம், கைத்தறி, துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்திக்கு கூடுதலாக ஒதுக்கி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது

## அர்ஜுனா விருது, சாகித்ய அகாடமி விருதுகளை பெற்ற தமிழக வீரர்கள், எழுத்தாளருக்கு தலைவர்கள் வாழ்த்து

**சென்னை:** விளையாட்டு துறையில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு வழங்கப்படும் மத்திய அரசின் அர்ஜுனா விருதை பெற்ற தமிழக செஸ் வீராங்கனை வைஷாலி, சாகித்ய அகாடமி விருது பெற்ற தமிழக எழுத்தாளர் ராஜசேகரன் உள்ளிட்டோருக்கு தமிழக ஆளுநர், தெலங்கானா ஆளுநர் மற்றும் அரசியல்தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:

**ஆளுநர் ஆர்.என்.ரவி:** நடப்பாண்டு சாகித்ய அகாடமி விருதைப் பெற்ற எழுத்தாளர் ராஜசேகரன் தேவிபாரதி, அர்ஜுனா விருதை வென்ற சதுரங்க கிராண்ட் மாஸ்டர் வைஷாலி, துரோணாச்சாரியர் விருதை பெற்ற ஆர்.பி.ரமேஷ் ஆகியோருக்கு மனமார்ந்த வாழ்த்துகள். மேலும், விளையாட்டுப் பிரிவுவாழ்நாள் சாதனைக்கான தியான்சந்த் விருதுக்கு தேர்வுசெய்யப்பட்ட இந்திய மகளிர் கபடி அணியின்பயிற்சியாளர் கவிதா செல்வராஜுக்கும் சிறப்பு வாழ்த்துகள்.

**தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன்:** அர்ஜுனாவிருதுகளை வென்ற தமிழகத்தின் முதல் பெண் செஸ் கிராண்ட் மாஸ்டர்வைஷாலி, உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் சிறப்பாக பந்து வீசியமுகமது ஷமி மற்றும் பல்வேறு விருதுகளை பெறும் அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் என் மனமார்ந்த வாழ்த்துகள்.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்:** மத்திய அரசின் உயரிய விருதுகளைப் பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த செஸ் வீராங்கனை வைஷாலி, ஸ்குவாஷ் வீரர் ஹரிந்தர் பால் சிங் சாந்து, பயிற்றுநர் ஆர்.பி.ரமேஷ், கபடி விளையாட்டுக்கான பயிற்றுநர் கவிதா செல்வராஜ் ஆகியோருக்கு என்னுடைய பாராட்டுகள். மென்மேலும்

பல்வேறு சாதனைகளை புரிந்து தமிழகத்துக்கு பெருமைகளை தேடித் தர வாழ்த்துகிறேன்.

**பாஜக மாநில தலைவர் அண்ணாமலை:** விளையாட்டுத் துறையில் 2-வது உயரிய விருதான அர்ஜுனா விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழகத்தின் பெண் கிராண்ட் மாஸ்டர் வைஷாலிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

**மநீம தலைவர் கமல்ஹாசன்:** சாகித்ய அகாடமி விருதை பெற்ற எழுத்தாளர் தேவிபாரதியை மனமார வாழ்த்துகிறேன். 44 ஆண்டுகளாக தமிழ் இலக்கிய உலகில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அவருக்கு இந்த கவுரவம் மிகவும் பொருத்தமானது.

**அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன்:** அர்ஜுனா விருதை வென்றிருக்கும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் பெண் கிராண்ட்மாஸ்டர் வைஷாலி, துரோணாச்சாரியார் விருதைப் பெற்ற சதுரங்க பயிற்சியாளர் ஆர்.பி.ரமேஷ், வாழ்நாள் சாதனைக்கான தயான் சந்த் விருதை வென்ற தமிழக கபடி பயிற்சியாளர் கவிதா செல்வராஜ் ஆகியோருக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள்.

**ஐஜேகே பொதுச்செயலாளர் பி.ஜெயசீலன்:** சாகித்ய அகாடமி விருது பெறும் எழுத்தாளர் தேவிபாரதிக்கும், விளையாட்டுத் துறையில் அர்ஜுனா விருது பெறும் இளம் செஸ் வீராங்கனை வைஷாலி, துரோணாச்சாரியார் விருது பெறும் செஸ் பயிற்சியாளர் ரமேஷ் ஆகியோருக்கு மனமார்ந்த வாழ்த்துகள். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## குடியரசு தின விழா 2024 | சிறப்பு விருந்தினராக பங்கேற்க பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரனுக்கு அழைப்பு

**புதுடெல்லி:** எதிர்வரும் குடியரசு தினவிழா 2024-ல் சிறப்பு விருந்தினராக பங்கேற்க பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் குடியரசு தினவிழாவின் போது உலக நாடுகளை சேர்ந்த தலைவர்களை சிறப்பு விருந்தினர்களாக இந்தியா அழைப்பது வழக்கம். கரோனா பரவல் காரணமாக கடந்த 2021 மற்றும் 2022-ல் சிறப்பு விருந்தினர்கள் அழைக்கப்படவில்லை.

நடப்பு ஆண்டில் (2023) குடியரசு தினவிழா சிறப்பு விருந்தினராக எகிப்து நாட்டு அதிபர் அப்தெல் ஃபதா அல்-சிசி பங்கேற்றார். அதற்கு முன்னதாக 2020-ல் அப்போதைய பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சனாரோ, 2019-ல் தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ரமபோசா, 2018-ல் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் தலைவர்கள், 2015-ல் அப்போதைய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, 2014-ல் அப்போதைய ஜப்பான் பிரதமர் ஷின்சோ, 2013-ல் பூடான் மன்னர் ஜிக்மே கேசர் பங்கேற்றுள்ளனர்.

இவர்கள் மட்டுமல்லாது நெல்சன் மண்டேலா, ஜான் மேஜர், முகமது கடாமி மற்றும் ஜாக் சிராக் போன்ற உலக நாடுகளின் தலைவர்களும் இதற்கு முன்னர் குடியரசு தினவிழாவில் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் 2024 குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றக பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த ஜூலை மாதம், பிரான்ஸ் அதிபரின் அழைப்பை ஏற்று, அந்நாட்டின் தேசிய தின கொண்டாட்டத்தில் சிறப்பு விருந்தினராகப் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். அப்போது, பிரதமர் நரேந்திர மோடிக்கு, இம்மானுவேல் மேக்ரன், தங்கள் நாட்டின் உயரிய விருதான கிராண்ட் கிராஸ் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர் விருதை வழங்கி கவுரவித்தார். இதற்கு முன் இந்த விருதை, தென்னாப்பிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா, இங்கிலாந்தின் தற்போதைய அரசர் சார்லஸ், ஜேர்மனியின் முன்னாள் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல் உள்ளிட்ட தலைவர்கள் இந்த விருதினைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மக்களவையில் நிறைவேறியது தேர்தல் ஆணையர் நியமன மசோதா - முக்கிய அம்சங்கள்


**புதுடெல்லி**: பெரும்பாலான எதிர்க்கட்சி எம்.பி.கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில், தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்கள் நியமன மசோதா 2023 வியாழக்கிழமை மக்களவையில் நிறைவேறியது. முன்னதாக, இம்மாதத்தின் துவக்கத்தில் மாநிலங்களவையில் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தியத் தேர்தல் ஆணையரை பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழுவே நியமிக்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் உத்தரவினை இந்த புதிய மசோதா கேள்விக்குட்படுத்துகிறது. முன்னதாக, தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்களை, பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய மூவர் குழு தேர்வு செய்ய வேண்டும் என்று நீதிபதி கே.எம்.ஜோசப் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் அடங்கிய உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு கடந்த மார்ச் மாதம் தீர்ப்பளித்தது. மேலும், நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றும் வரை இந்த விதிமுறை தொடரும் என்றும் ஒருமனதாக தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தேர்தல் ஆணையர்களின் சுதந்திரத்தை உறுதி செய்யும் உச்ச நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்திருந்தது.

இந்நிலையில், தேர்தல் ஆணையரைத் தேர்வு செய்யும் நடைமுறையில் இருந்து உச்ச நீதிமன்றத்தினை விலக்கி வைக்கும் வகையில், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு மாற்றாக கேபினெட் அமைச்சர் ஒருவர் தேர்வுக் குழுவில் இடம்பெறுவதற்கு ஏற்ப மத்திய அரசு இந்த மசோதாவை உருவாக்கியுள்ளது. மக்களவையில் இந்த மசோதா மீது வியாழக்கிழமை நடந்த விவாதத்தின்போது பேசிய சட்டத் துறை அமைச்சர், "தேர்தல் ஆணையர்களின் பணி நிலைமைகள் பற்றிய 1991 சட்டம் ஒரு அரைகுறை முயற்சியாகும். முந்தைய சட்டம் கணக்கில் எடுக்கத் தவறிய அனைத்து விஷயங்களையும் இப்புதிய மசோதா உள்ளடக்கியுள்ளது" என்று தெரிவித்தார். பின்னர் குரல் வாக்கெடுப்பு மூலம் இம்மசோதா நிறைவேற்றப்பட்டது.

இந்தப் புதிய மசோதவின்படி, முன்னாள், தற்போதைய தலைமைத் தேர்தல் அதிகாரி, பிற தேர்தல் அதிகாரிகள் அவர்கள் பணியில் இருக்கும்போது கூறிய வார்த்தைகள், நடந்து கொண்ட செயல்களுக்காக அவர்கள் மீது கிரிமினல் சிவில் வழக்கோ நீதிமன்றங்களில் தொடர முடியாது. இந்த மசோதா மீது மாநிலங்களவையில் நடந்த விவாதத்தில் காங்கிரஸ் எம்.பி. ரன்தீப் சுர்ஜ்வாலா பேசும்போது, "மோடி அரசு இந்திய ஜனநாயகத்தின் மீது தாக்குதல் நடத்துகிறது. இந்திய ஜனநாயகம் மற்றும் தேர்தல் ஆணையத்தின் தன்னாட்சி, அச்சமின்மை மற்றும் நேர்மை போன்றவை புல்டோசரால் அழிக்கப்படுகின்றது" என்று குற்றம்சாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இந்திய மல்யுத்த சங்க தலைவராக சஞ்சய் சிங் தேர்வு: ‘மல்யுத்தத்தை விட்டு விலகுகிறேன்’ - சாக்சி மாலிக்



**புதுடெல்லி:** இந்திய மல்யுத்த சங்க நிர்வாகிகள் தேர்வு நேற்று நடைபெற்றது. இதில் உத்தரபிரதேச மாநில சங்கத்தின் துணைத் தலைவரான சஞ்ஜய் சிங் 40 வாக்குகள் பெற்று புதிய தலைவராக தேர்வானார். அவரை எதிர்த்து போட்டியிட்ட முன்னாள் வீராங்கனையான அனிதா ஷியோரனுக்கு 7 வாக்குகள் மட்டுமே கிடைத்தது. சஞ்ஜய் சிங், பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட முன்னாள் தலைவரான பிரிஜ் பூஷண் சரண் சிங்கின் ஆதரவாளர் ஆவார்.

பிரிஜ் பூஷண் சரண் சிங்குக்கு எதிராக இந்திய மல்யுத்த வீராங்கனைகளான சாக்சி மாலிக், வினேஷ் போகத் ஆகியோர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பாலியல் குற்றச்சாட்டுகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களுக்கு ஆதரவாக முன்னணி வீரரான பஜ்ரங் பூனியாவும் போராட்டத்தில் கலந்து கொண்டார். இதுதொடர்பான வழக்கை விசாரித்த நீதிமன்றம், பிரிஜ் பூஷண் சரண் சிங் மீது வழக்கு பதிவு செய்ய உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து அவர், பதவியை இழந்தார்.

போராட்டத்தின் போது பிரிஜ் பூஷண் சரண் சிங்கின் ஆதரவாளர்கள் தேர்தலில் போட்டியிடக்கூடாது என சாக்சி மாலிக் உள்ளிட்ட வீராங்கனைகள் கோரிக்கை வைத்தனர். இந்த கோரிக்கையை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாக்குர் ஏற்றுக்கொண்டிருந்தார்.

**13 பேர் வெற்றி:** இந்நிலையில் பிரிஜ்பூஷண் சரண் சிங் ஆதரவாளரான சஞ்ஜய் சிங் புதிய தலைவராக தேர்வாகி உள்ளது போராட்டம் நடத்திய மல்யுத்த வீராங்கனைகளை அதிர்ச்சி அடைய செய்துள்ளது. 15 நிர்வாகிகளை தேர்வு செய்வதற்காக நடைபெற்ற தேர்தலில் பிரிஜ் பூஷண் சரண் சிங்கின் ஆதரவாளர்கள் 13 பேர் வெற்றி பெற்றுள்ளனர்.

**‘மல்யுத்தத்தை விட்டு விலகுகிறேன்’ - சாக்சி மாலிக்:** இந்திய மல்யுத்த சங்கத்தின் தலைவராக சஞ்ஜய் சிங் தேர்வாகி உள்ள நிலையில், சாக்சி மாலிக் மல்யுத்த போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர், கண்ணீர் மல்க கூறும்போது,“நாங்கள் எங்கள் இதயத்திலிருந்து போராடினோம், ஆனால் பிரிஜ் பூஷனின் வணிக கூட்டாளியும் அவரது நெருங்கிய உதவியாளருமான சஞ்சய் சிங் தலைவராக தேர்வாகி உள்ளார். இதனால் நான், மல்யுத்தத்தை விட்டு விலகுகிறேன். நாங்கள், ஒரு பெண் தலைவராக வரவேண்டும் என விரும்பினோம். ஆனால் அது நடக்கவில்லை” என்றார்.

## சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் | சாம்பியன் பட்டம் வென்றார் டி.குகேஷ்; அர்ஜுன் எரிகைசிக்கு 2-வது இடம்

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**



**சென்னை:** தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் 'சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ்' சாம்பியன்ஷிப் சென்னையில் நடைபெற்று வந்தது. கடந்த 15-ம் தேதி தொடங்கிய இந்தத் தொடரின் கடைசி மற்றும் 7-வது சுற்று ஆட்டம் நேற்று நடைபெற்றன. இதில் இந்திய கிராண்ட் மாஸ்டரான டி.குகேஷ், சகநாட்டைச் சேர்ந்த மற்றொரு கிராண்ட் மாஸ்டரான ஹரிகிருஷ்ணாவை எதிர்த்து விளையாடினார். கருப்பு நிற காய்களுடன் விளையாடிய குகேஷ் 31-வது நகர்த்தலின் போது டிரா செய்தார்.

மற்றொரு இந்திய கிராண்ட் மாஸ்டரான அர்ஜுன் எரிகைசி, ஹங்கேரியின் சனான் சுகிரோவுடன் மோதினார். வெள்ளை நிற காய்களுடன் விளையாடிய அர்ஜுன் எரிகைசி 57-வது நகர்த்தலின் போது வெற்றி பெற்றார். உக்ரைனின் பாவெல் எல்ஜனோவ், அமெரிக்காவின் லெவோன் அரோனியன் மோதிய ஆட்டம் டிரா ஆனது.

ஈரானின் பர்ஹாம் மக்சூட்லூ, செர்பியாவின் அலெக்சாண்டர் ப்ரெட்கேவை வீழ்த்தினார். இந்த ஆட்டத்தில் பர்ஹாம் மக்சூட்லூ 22-வது காய் நகர்த்தலின் போது வெற்றி பெற்றார். 7 சுற்றுகளின் முடிவில் டி.குகேஷ், அர்ஜுன் எரிகைசி ஆகியார் தலா 4.5 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருந்தனர். இதைத் தொடர்ந்து டைபிரேக்கரில் குகேஷ் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார். அர்ஜுன் எரிகைசி 2-வது இடத்தையும், ஹரிகிருஷ்ணா 4 புள்ளிகளுடன் 3-வது இடத்தையும் பிடித்தனர்.

பாவெல் எல்ஜனோவ் (4 புள்ளிகள்), லெவோன் அரோனியன் (3.5 புள்ளிகள்), பர்ஹாம் மக்சூட்லூ (3.5புள்ளிகள்), சனான் சுகிரோவ் (2.5 புள்ளிகள்), அலெக்சாண்டர் ப்ரெட்கே (1.5 புள்ளிகள்) ஆகியோர் 4 முதல் 8-வது இடங்களுடன் தொடரை நிறைவு செய்தனர்.

**15 லட்சம் பரிசு:** சாம்பியன் பட்டம் வென்ற குகேஷுக்கு ரூ.15 லட்சம் பரிசுத்தொகை வழங்கப்பட்டது. 2-வது இடத்தை பிடித்த அர்ஜூன் எரிகைசிக்குரூ.10 லட்சமும், 3-வது இடம் பெற்ற ஹரி கிருஷ்ணாவுக்கு ரூ.8 லட்சமும் வழங்கப்பட்டது. சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற குகேஷ், ஃபிடே சர்க்யூட் தரவரிசையில் முதலிடத்தை பிடித்தார். மேலும் கேண்டிடேட்ஸ் தொடருக்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்பையும் அதிகரித்துக்கொண்டார்

## 10 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் தங்கம் வென்றார் லதா



**சென்னை:** சென்னை பல்கலைக்கழக உடற்கல்வி துறை சார்பில் லட்சுமணசாமி முதலியார் பொன்விழா நினைவு தடகளப்போட்டி மேலக்கோட்டையூரில் நடைபெற்று வருகிறது.

இதன் 2-வது நாளான நேற்று மகளிருக்கான 10 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் சென்னை எம்ஓபி வைஷ்ணவா கல்லூரி மாணவியான டி.லதா, பந்தய தூரத்தை 37:42.27 விநாடிகளில் கடந்து 16 வருடங்களுக்கு முன்னர் நிகழ்த்தப்பட்ட சாதனையை முறியடித்து புதிய சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார். எத்திராஜ் மாணவி மித்ரா (38:52.84) 2-வது இடமும், எம்ஓபி வைஷ்ணவா மாணவி கீதாஞ்சலி (40:20.04) 3-வது இடமும் பிடித்தனர்.

100 மீட்டர் ஓட்டத்தில் எம்ஓபி வைஷ்ணவா கல்லூரி மாணவியான பி.மரியா நிவேதா பந்தய தூரத்தை 11.88 விநாடிகளில் கடந்து தங்கப் பதக்கம் வென்றார். ஆடவருக்கான குண்டு எறிதலில் லயோலா கல்லூரி மாணவரான சூர்ய பிரகாஷ் 16.15 மீட்டர் தூரம் எறிந்து புதிய சாதனையுடன் தங்கம் வென்றார். மகளிருக்கான 100 மீட்டர் தடைதாண்டும் ஓட்டத்தில் லயோலா மாணவி ஸ்ரீ ரேஷ்மா (14.41 விநாடிகள்) முதலிடமும், எம்ஓபி வைஷ்ணவா மாணவி கே.நந்தினி (14.68) 2-வது இடமும் பிடித்தனர்.

EVA STAL